# திருமலைத்தீபம்

# THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 16

விலை 20/=

வைகாசி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 16

E-mail- catetcota@gmail.com

T.P- 026 2221022, 0263202532


**ஆண்டவர் என்றென்றும் புகழப் பெறுவாராக (தி.பா 89:52)**

## மறைமாவட்டக் குருமுதல்வரின் செய்தி



உயிர்த்த கிறிஸ்துவின் உடனிருப்பையும், அதன் வழி சீடர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களையும் மீண்டும் மீண்டும் நினைவூட்டி நிற்கும் இந்தப் பாஸ்கா காலத்தில், அருள்நிறைந்த பல்வேறு விழாக்கள் வழியாக ஆசீர்வாதங்களைத் தாங்கி வருகின்ற இன்னுமொரு மாதத்தினுள் - வைகாசி மாதத்தினுள் - நாம் காலடி பதிக்கின்றோம்.

வைகாசி மாதமென்றாலே எம் மனதில் எழும் முதல் சிந்தனை **வணக்கமாதம்** என்பதாகும். இம்மாதம் முழுவதும் அம்மா மரியாவினுடைய வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்துத் தியானிக்கவும், அவருடைய பரிந்துரை வழியாகவும் அவரோடு இணைந்தும் இறைதிருவுளத்தை அறிந்து ஏற்று எம் வாழ்வை ஆசீர்வாதங்களால் நிரப்பவும் முனைந்து நிற்போம். பங்குகளில் நடைபெறும் மரியன்னை பக்தி முயற்சிகளை மெருகூட்டி, மென்மேலும் வாய்ப்புக்களை உருவாக்குவோம்.

மேலும் வைகாசி மாதத்தின் தொடக்க நாளிலே தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். எங்கள் குடும்பங்களின் நல்வாழ்வுக்காக, எமது பிள்ளைச் செல்வங்களின் எதிர்கால வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைக்கும் அனைவரையும், அவர்தம் தொழில் துறைகளையும் இறைவனின் கரங்களில் அர்ப்பணம் செய்து அவருடைய ஆசீரோடு எமது குடும்பங்கள் முன்னேற்றம் அடையவும், எமது குடும்பங்களில் மகிழ்ச்சி நிறைந்திருக்கவும் இறைவரம் வேண்டி மன்றாட மேலும் ஒரு வாய்ப்பாக இம்மாதம் அமைகின்றது.

வைகாசி மாதம் 7ம் நாள் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட 32வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறோம். அன்றைய நாளில் எமது ஆயருக்காக, அவர்தம் உடல், உள ஆரோக்கியத்துக்காகச் செபிப்போம். அவர் வழியாக நாம் பெற்றுக்கொண்ட பல்வேறு ஆசீர்வாதங்களுக்காகவும், மறைமாவட்ட அபிவிருத்திகளுக்காகவும், ஆலோசனை வழிகாட்டல்களுக்காகவும் நன்றி நிறை உள்ளத்தோடு அவரைப் பாராட்டுவோம்.

வைகாசி மாதம் 24ம் திகதி தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். தளர்ந்து போயிருந்த, நம்பிக்கை இழந்திருந்த சீடர்களைத் தம் வல்லமையால் நிரப்பிப், புத்துயிரும் புத்தெழுச்சியும் தந்து திருச்சபையின் தொடக்கத்தை முத்திரையிட்ட அதே ஆவியானவர் இன்றும் தமது வல்லமையால் எம்மை நிரப்புகின்றார், எமக்கும் புத்துயிர் ஊட்டுகின்றார் என்ற நம்பிக்கையில் உறுதிபெற்றிட இம்மாதத்தை இருகரம் விரித்து ஏற்றுக்கொள்வோம். தூய ஆவியானவருடைய பெருவிழாவை முன்னிட்டு அனைத்துப் பங்குகளிலும் பல்வேறு விதமான ஆன்மீக ஆயத்தங்கள் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஆர்வத்தோடு பங்கெடுப்போம். 23ம் திகதி சனிக்கிழமை குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் இடம்பெறவிருக்கும் திருவிழிப்பு ஆராதனையிலும் பெருந்திரளாகப் பங்கேற்று பயன் அடைவோம். சிறப்பாக இந்நாட்களில் ஆன்மீக ஆயத்தங்களைச் செய்ய முன்வரும் அனைவரையும் அன்போடு ஏற்று, அவர்களுக்கு எமது ஒத்துழைப்பையும், ஒருமைப்பாட்டையும் தாராளமாகத் தந்து உதவிடுவோம். தூய ஆவியானவரின் கொடைகளாகிய அன்பிலும், அமைதியிலும், ஒற்றுமையிலும், மகிழ்ச்சியிலும் எம்மைப் பலப்படுத்த முயற்சி செய்வோம். இன்னும் சிறப்பாகத் தூய ஆவியானவரின் வருகையால் சீடர்கள் துணிவோடு முன்னோக்கி வெற்றியோடு சென்றதுபோல, எமது மறைமாவட்டமும், மறைமாவட்ட செயற்பாடுகளும், மறைமாவட்ட எதிர்கால முன்னெடுப்புகளும் தூய ஆவியானவரின் அருட்பொழிவால் புது மெருகுபெற்றுப், புத்துயிர் பெற்று வளர்ச்சிப் பாதையில் தடம் பதிக்கும் தலத் திருச்சபையாக மிளிர நம்பிக்கையோடு மன்றாடுவோம்.

வைகாசி மாதம் 31ம் நாள் எமது மறைமாவட்டத் திருச்சபையின் வரலாற்றில் இன்னுமொரு ஆசீர் நிறைந்த தடப்பதிப்பு ஆகும். பாலையூற்று தூய லூர்து அன்னை பங்கு உருவாகிய 50வது ஆண்டினை நிறைவு செய்கின்றோம். இத் திருத்தலத்தின் தொடக்கத்தில் இருந்தே அங்கு குடிகொண்டிருக்கும் தூய லூர்து அன்னை தம் பரிந்துரையாலும், அற்புதங்களாலும் பல்வேறு இடங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்களைத் தம்பால் ஈர்த்துள்ளதை, இன்றும் ஈர்த்துக் கொண்டிருப்பதை நாம் அறிந்திருக்கின்றோம்.

தொடர்ச்சி 08ம் பக்கம்

## ஆயரை வாழ்த்துகின்றோம்




எமது மறைமாவட்ட ஆயர் அதி. வந். கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட 32வது ஆண்டு நிறைவை மே மாதம் 7ம் திகதி கொண்டாடுகிறார். ஆயர் அவர்கள் எமது மறைமாவட்டத்திற்கு ஆற்றிக்கொண்டிருக்கும் செயல்கள், பணிகள், அபிவிருத்திகள், ஆலோசனைகளுக்காக நன்றிகள் கூறுவதுடன் ஆயருக்காகச் **செபிப்போம், வாழ்த்துவோம்.**

## ஜோசேப் வாஸ் மண்டபம் திறப்பு விழா

25. 04. 2015 அன்று காலை 08.30 மணிக்கு திருகோணமலை திருமறைக்கல்வி நடுநிலையத்தில் எமது மறைமாவட்ட ஆயர் அதி. வந். கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினால் **ஜோசப் வாஸ் மண்டபம்** திறந்து வைக்கப்பட்டு சிறப்புரையும் வழங்கினார். இந்நிகழ்விற்கு மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ரி. கிங்ஸ்லி றொபட் அவர்களும், ஆயரின் பிரதிநிதி அருட்பணி C. நோயல் இம்மானுவேல் அவர்களும், இயக்குனர்களும், பங்குத் தந்தையர்களும், அருட்சகோதர சகோதரிகளும், E.H.E.D இயக்குனரும் பணியாளர்களும், மறையாசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் **ஜோசப் வாஸ் மண்டபம்** முழுமையடைய ஆலோசனை வழங்கியவர்கள், பண உதவி, சரீர உதவி, போன்ற பல்வேறு உதவிகளைச் செய்த அனைத்து உள்ளங்களுக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் திருமறைக்கல்வி நடு நிலைய இயக்குனர்களும் பணியாளர்களும் தெரிவித்துக் கொள்கின்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆண்டவரின் செயல்கள் நீதியானவை' (தி.பா 103:6)

## உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

வைகாசித் திங்களிலே மீண்டும் உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு. இம் மாதம் பல முக்கிய நிகழ்வுகளை உள்வாங்கி இருக்கின்றது. முதலில் முதலாவது நாள். **"மேதினம்"**, **தொழிலாளர் தினம்.** தொழிலாளர்களின் பாதுகாவலராகத் துலங்கும் **தூய வளனாரின்** சிறப்பு நாளாக கொண்டாடுகின்றோம். தூய வளனாரின் சூசையப்பரின் பெயர் கொண்டவர்களுக்கும், பெயர் கொண்ட இடங்களும் இன்றைய நாளிலே சிறப்பு நாளாக கொண்டாடி சிறப்பிக்கின்றார்கள்.

உழைப்பையும் அதன் பெருமைகளையும் நாம் மனங்களில் கொள்ள வேண்டும். உழைப்பு என்பது நமது பொறுப்பு, உழைப்பு என்பது நமது கடமை இதனைக் குறித்தே தூய பவுல் அடிகளார் கூறினார். **"உழைக்காதவர் உண்ண முடியாதென்று"** எனவே எந்தெந்த நிலைகளில் உள்ளவர்களாயினும் உழைப்பு என்பது பொதுவானது. வேறுபட்ட வடிவங்களைக் கொண்டது. **கற்றல்** என்பது மாணவரின் உழைப்பு கற்பித்தல் என்பது ஆசிரியரின் உழைப்பு **விதைத்தல்** என்பது விவசாயியின் உழைப்பு **அறுவடை** என்பது வெற்றியின் உழைப்பு என்பதை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்.

இம் மாதத்தின் மூன்றாம் நாளில் உலகளாவிய ரீதியில் பொதுநிலையினர் தினம் கொண்டாடப்படுகின்றது. பொதுநிலையினரும் அவர்களின் பணிகளும் வளர்ச்சிகளும் மேலும் வளங்கள் காண வாழ்த்துகின்றோம்.

இம் மாதம் 07ம் திகதி இன்னும் ஒரு சிறப்பான நாளாகும். நமது மறை மாநில ஆயர் அதி.வந்.கலாநிதி. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட தினமாகும். 1983ம் ஆண்டு வைகாசி 07ல் ஆயராக திருநிலைபடுத்தப்பட்டவர். எதுவித குறைகளுமின்றி வாழ இறைவன் துணைபுரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

இம் மாதம் 24ம் திகதி தூய ஆவியானவரின் பெருவிழாவைக் கொண்டாட உள்ளோம். நம்மைக் காக்கின்றவர், நம்மை வழிநடத்துகின்றவர் நம் வாழ்வின் ஊற்றாக விளங்குகின்றவர் அவரின் துணை இன்றி நம்மால் எந்த நல்ல காரியங்களையும் செய்யமுடியா தென்பதை உணர்ந்து செயற்படுவோம்.

மேலும் இம்மாதத்தின் இறுதி நாளான 31ம் திகதி தந்தை மகன் தூய ஆவியாரின் பெருவிழாவான "மூவொரு கடவுளின் பெருவிழாவைக் கொண்டாட உள்ளோம். மூவொரு கடவுளை ஒருமனங் கொண்டவர்களாக எங்களின் நம்பிக்கையின் கண்கள் திறக்க இறை ஆசீர் பெறுவோமாக.

புதிய ஆட்சி முறையை நோக்கும் போது நூறு நாள் வேலை திட்டங்கள் நிறைவடைந்து கொண்டிருக்கின்றன. பதட்டங்களும் மோதல்களும் குறைவதாகத் தெரியவில்லை அதன்படியே மீள்குடியேற்றங்கள்: காணாமற் போனோரின் விபரங்கள்: மற்றும் புனர் வாழ்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதை உணர்கின்றோம்.எப்படியும் நல்லவையே நிகழ வேண்டும் அதுவே எல்லோரின் எதிர்பார்ப்பாகும்.

இம்மாதம் 17ம் திகதி உலக தொடர்பு சாதன தினமாகக் கொண்டாடப்படுகின்றது. தொடர்பு சாதனங்கள் அனைத்துமே பரந்த அளவில்: நிறைந்த நிலைகளில் பாரிய வளர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், மின்னஞ்சல்கள், கணணிகள் இப்படியாக செய்திப் பரிமாற்றங்கள் நிறைந்து கொண்டே போகின்றன. மக்கள் தொடர்பான செய்திப் பரிமாற்றங்கள் இன்னும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

மதமென்றோ, மொழி என்றோ, இனமென்றோ, பிரதேசமென்றோ வேறுபாடுகள் தோன்றாமல் ஒரு மண்ணிலே மலர்ந்த மலர்களாக; நல்லுறவுகளோடும், நல்லுணர்வுகளோடும் வாழும் பாக்கியத்தை அனைவரும் பெற வேண்டுமென வேண்டி நிற்போம். எங்கும் நல்லவைகளும் எதிலும் நல்லவைகளும் காண வாழ்த்திக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் என்று கூறிநிற்கின்றேன்.

## அன்னை மரியாளின் வணக்க மாதம்



வைகாசி பிறந்தாலே அன்னை மரியாளின் மாதம் என்று எண்ணிலடங்கா உள்ளத்தில் ஓர் மகிழ்ச்சியே இது அன்னையின் பக்தர்கள் அவர்மேல் வைத்த அன்பையும் பக்தியையும் தெளிவாக வெளிபடுத்துகின்றது. எனவே கத்தோலிக்கர்களாகிய எமக்கு மரியாளின் பக்தி பழமையும் முதுமையும் வாய்ந்துள்ளது என்பது உண்மையே, இது கத்தோலிக்கர் மற்றும் பிறமதத்தினர் உள்ளங்களில் அசைக்க முடியாத நம்பிக்கையாகவும் நிலைத்துள்ளது இங்கு மரியாளின் பக்தியானது புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயே ஆரம்பமானது அதாவது கபிரியேல் வானதூதர் தொடக்கி வைத்தார் லூக் 1:28 "அருள் நிறைந்தவளே வாழ்க", லூக் 1:48 "இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே". இவ்வார்த்தைகளின் வழியாகவே நம் பயணம் தொடர்கின்றது.

### அன்னையின் ஜெபமாலை

13ம் நூற்றாண்டில் ஆல்பிஜென்ஸ் என்ற பிரிவின வாதிகள் தோன்றி பிரான்ஸ் நாட்டிலுள்ள திருச்சபையை அழிக்கப் போவதாக மிரட்டி ஆலயங்களை உடைத்து குருக்களையும் கொல்வது போன்று சிறிய வேதகலாபனையை உருவாக்கினர். இதனைக் கண்ட **தூய சுவாமிநாதர்,** மனவேதனையுடன் அன்னை மரியாவிடம் உருக்கமாகத் தன்னையே ஒப்புக்கொடுத்து கடும்தவத்தோடு மன்றாடினார். அன்னை மரியா இரக்கம் கொண்டு **தூய சுவாமிநாதருக்கு** 1206ம் ஆண்டு காட்சி கொடுத்து ஒரு ஜெபமாலையும் கொடுத்து தைரியத்தையும் கொடுத்து அச்செபமாலையை ஜெபிக்கும் முறையையும் கற்றுக் கொடுத்தார். அது எவ்வாறு என்றால், "ஜெபமாலையின் மகிமை எனக்கும் என் மகனுக்கும் உகந்தது. அது பாதுகாப்பையும், அருளையும், பல ஆசீர்வாதங்களையும் பெற்றிடவும், தீமைகளை அழித்து நன்மைகளை உருவாக்கவும் வல்லமை நிறைந்தது. இந்த பூமி இருக்கும் வரை இந்த பக்தி முயற்சியும் இருக்க வேண்டும். இதனால் விசுவாசிகள் அனைவரும் நன்மைகள் பெற வேணடும். நாளும் அவர்களை பாதுகாத்து நன்மைகள் செய்ய காத்திருக்கின்றேன்" என்றார்.

"இதுவே என் மக்களுக்கு நான் விட்டுச் செல்லும் சிறந்த கொடை" என்றார். இவ்வாறான செய்தி பரவியதும் உலகில் மனம் திரும்பியோர் பலர் அதில் பல புதுமைகளையும் சுவைத்தார்கள் என்பதும் உண்மையே.

இதன் பின்பு பல துறவிகளும், குருக்களும், ஆயர்களும் ஜெபமாலைப் பக்தியில் ஒன்றிணைந்து **உள்வாங்கிக்கொண்ட** போது அக் காலத்தில் ஒரு லட்சத்திற்கும் மேலான பிரிவினை சகோதரர்கள் பிரான்சிலும், ஸ்பெயினிலும் மனம் மாறினார்கள். ஆகவே அன்னை மரியாளும், ஜெபமாலையும், கத்தோலிக்கருக்கு இறைவன் கொடுத்த அற்புதமான பொக்கிஷம் (கொடை) என்பதில் பெருமையே.

நாமும் அன்னை மரியாவிடம் எம்மை ஒப்புக் கொடுத்து நாள்தோறும் ஜெபமாலையை செபித்து, நன்மைகளைப் பெற்று அவளிடமும் அவள் மகன் இயேசுவிடமும் இருந்து ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

**தொகுப்பு**
**K.சுபா**

### விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 06

**சென்ற இதழின் பாராட்டுக்குரியவர்கள் :~**

| | | | |
|---|---|---|---|
| 1. ச.மேரி லின்ரா | ~ மூதூர் 07 | 21. எல்.ஆர். ஜொனத்தன் | ~ சாம்பல் தீவு |
| 2. என் . தஷஜா | ~ கும்புறுபிட்டி | 22. டி.ஜெரேமினா | ~ பேராலயம் |
| 3. த. அனோஸன் பேட்றம் | ~ சாம்பல் தீவு | 23. ஆர். மேரி ரொஷானி | ~ உவர்மலை |
| 4. கு. தர்ஷிகன் | ~ குவாடலூபே | 24. சை. பிரின்சி செரின் | ~ பேராலயம் |
| 5. ஜே. செரேனா | ~ செல்வநாயகபுரம் | 25. தே. சுமில்டன் | ~ நிலாவெளி |
| 6. ட.சனோஜ் அன்ரனி | ~ உவர்மலை | 26. ஏம்.விவியாஸி | ~ அன்புவழிபுரம் |
| 7. கே.எம். அனிஸ்ரன் மதுக்ஷா | ~ சாம்பல் தீவு | 27. வே. ஆன் டிலக்சிகா | ~ கும்புறுபிட்டி |
| 8. ஜே. புனோரிடா | ~ பேராலயம் | 28. ஜே.ருக்சிகா | ~ சாம்பல் தீவு |
| 9. திருமதி.வி. டொறத்தி | ~ பேராலயம் | 29. திருமதி. ரஜனி எட்வின் | ~ உவர்மலை |
| 10. அ . கரோலின் கீர்த்திகா | ~ பேராலயம் | 30. ஆர் எப்.ஆன்வஜீரா | ~ பேராலயம் |
| 11. லூ.அ.மேரி விக்டோரியா | ~ பாலையூற்று | 31. பியூலா டானியலா | ~ பேராலயம் |
| 12. நே. கெஷ்மியா | ~ கும்புறுபிட்டி | 32. பி. எப். கிருத்திகா | ~ சாம்பல் தீவு |
| 13. ரஜி சுகத் | ~ பாலையூற்று | 33. அ.திவ்யரூபினி | ~ பேராலயம் |
| 14. த.அபிக்ஷா | ~ சாம்பல் தீவு | 34. எஸ். நிலானி அனிற்றா | ~ சாம்பல் தீவு |
| 15. அ.றொக்சியா வாத்லட் | ~ சாம்பல்தீவு | 35. பி. நிலக்ஷனா | ~ பாலையூற்று |
| 16. றொ. கன்சிகா | ~ மூதூர் | 36. ஆர்.ஜே. தினேஸ்ராஜ் | ~ செல்வநாயகபுரம் |
| 17. ஞா. சரோமி | ~ நிலாவெளி | 37. ரெ. மே.அபிலாஷினி | ~ மூதூர் |
| 18. ஆர்.டிலக்ஸ் ராஜ் | ~ செல்வநாயகபுரம் | 38. திருமதி. மதுரா கெனடி | ~ பேராலயம் |
| 19. டி . ஆன் நியோமி | ~ பேராலயம் | 39. வி. ஆர். கனிஸ்டா மேரி | ~ செல்வநாயகபுரம் |
| 20. த. அதீஷன் பேனாட் | ~ சாம்பல் தீவு | | |



### தன்னம்பிக்கை

எழிச்சியூட்டும் எண்ணங்கள் உன் மனதில் எழாதவரையில்
நீ எழுந்து நடப்பவர்கள் வரிசையிலே
இடம் பெறுவதில்லை

சில பெரியவர்கள் தாங்கள் சிறியவர்களாகி விடுவோமே
என்ற பயத்தில், பல சிறியவர்களைப்
பெரியவர்களாக்காமல் வைத்திருக்கிறார்கள்.

உயரமாய் வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம்
உயர்ந்த மரங்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்விடும் வாழ்வு

அருட்பணி N.C அருள்வரதன்

✷ மனிதங்கள் இல்லாத
மனிதர்களை
மனிதராய் ஏற்பது
கடினமானதே
கறைகளால் மனங்கள்
நிறைந்து கொள்ள
குறைகளே வெளிப்படும்
வாய்களிலே

✷ நல்லதையே வாழ்வில்
கடைப்பிடித்தால்
நல்லவையே செயலுருவம்
பெறுவதுண்மை
நல்லவையே மனதுக்குள்
நிறைந்து கொள்ள வாய்கள்
சொல்வதும்
நல்லவையாய் இருப்பதுண்மை

✷ தீமைகளைத் தேடியதை
தொடருமொரு வாழ்வு
தூய்மைகளை விட்டகன்ற
துன்ப நிலை தானே
உண்மைகளை உண்மையாய்
உணராமல்
பொய்களுடன்
பின்னிப் பிணைவதால் வாழ்வு
என்ன நிலைகாணும்

✷ கேடுகளும் கெடுமதிகள்
கொடுமை எனக்கண்டும்
நாடி அதை நாம் சென்றால்
நல் விளைவு தென்படுமா

✷ வாழ்விலெழும் போராட்டம்
வறுமையோ சுமை எதுவோ
தானதனை முகங்கொடுத்து
தாங்கியதை வெற்றிகொண்டு
வீர நடைபோடும் போது
சீர் நிறைந்த மனங்களதை
சிந்தித்துப் பெருமை கொள்ளும்

✷ தோல்விகளைக் கண்டு மனம்
துவண்டிடாமல்
தாவியதை வெற்றிகொண்டு
உண்மை நேர்மை என
உயர் வழியின் நிலைகளையே
உணர்ந்தவற்றை வாழ்வோடு
இணைத்துக் கொண்டால்
உண்மையில் வாழ்வின் உச்சமது
உன்னதமாகவே சுடர்விடுமே



## செபம்.....



இறைவன் தனது திட்டத்தை மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதல்ல செபம்; மாறாக இறைவனின் திட்டத்திற்கேற்ப நாம் மாற வேண்டும் என்பது தான் செபம்.

-தூய தோமஸ் அக்குவைனஸ்-

## ஒரு வருடத்தில்.....

மனிதன் சராசரியாக ஒரு வருடத்தில்
- **உழைக்க** 3500 மணித்தியாலங்களும் (அண்ணளவாக 40%)
- **தூங்க** 2900 மணித்தியாலங்களும் (அண்ணளவாக 33%)
- **உண்ண** 800 மணித்தியாலங்களும் (அண்ணளவாக 9%)
- **குளிக்க, அலங்கரிக்க, அழகு செய்ய** 600 மணித்தியாலங்களும், (அண்ணளவாக 7%)
- **எல்லா வகையான பொழுது போக்குகளும்** (சினிமா உட்பட) 400 மணித்தியாலங்களும் (அண்ணளவாக 4.5%)
- **செபிக்க, மத வழிபாடுகளுக்காக 60** மணித்தியாலங்களும் (அண்ணளவாக 0.7%)
- **ஏனையவற்றுக்காக** (அண்ணளவாக 1.8%) செலவு செய்கின்றான்.

**செபிக்க, வழிபட எடுக்கும் நேரம் மொத்த நேரத்தில் நூற்றுக்கு ஒருவீதம் கூட இல்லை???????????????**

## சூசை என்னும் இனிய தூய நாமம்



J - Justice - நீதி
O - Obedience - கீழ்படிதல்
S - Silence - அமைதி
E - Experience - அனுபவம்
P - Prudence - விவேகம்
H - Humility - தாழ்ச்சி

**இத்தனை பண்புகளும் இவரிடம் காணப்பட்டன.**

## தொழிலாளரின் பாதுகாவலர்

நாத்திகப் பொதுவுடமையாளர் மே தினத்தைத் தொழிலாளரின் நலனுக்கென்று முதன்முறையாக உருவாக்கினர், முறையான முழுமையான பொருள் இதற்கு கிடைக்கும் வகையில் 1955ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்தினாதர் **"தொழிலாளரான தூய சூசையப்பருக்கு** மே முதல்நாளை திருநாளாக கொண்டாடத் திருச்சபைக்கு பணித்தார்.

## தூய ஆவியும் அன்னை மரியாவும்



- தூய ஆவி அன்னையை இறைதிட்டத்திற்குத் தயாரித்தார்.
- இறைதிட்டம் அவரில் நிறைவடையச் செய்தார்.
- இறைமகனை அவரிடமிருந்து உலகிற்கு வெளிப்படுத்தினார்.
- இறைவனின் அன்பு இவர் வழியாகச் சென்றடைய வைக்கிறார்.
- வாழும் அனைவரின் தாயாக அன்னையை மாற்றுகிறார்.

## நிம்மதி எங்கே ?

**கலங்காதே மானிடா!**

உன் மனம் என்னும் விளைநிலத்தில்
இறைவார்த்தை என்னும் விதை விதைத்து
அன்பெனும் நீர் ஊற்றி
பண்பென்னும் பசளையிட்டு
பொய், பொறாமை, போட்டி, பகைமை
சுயநலம், அகங்காரம் எனும்
நச்சுக் களைகளை வேரோடு அழித்திடு

சாத்தான் என்னும் விசக்கிருமியை
ஜெபம் எனும் கிருமி நாசினி கொண்டு
அழித்து வரும்போது
மனித நேயம் எனும் மலரோடு கருணை
என்னும் கனியும் கிடைக்கும்

உதவி எனும் விலையிட்டு
உலகமெனும் சந்தையிலே
விறியோகம் பண்ணும்போது
இலாபம் என்னும் வடிவினிலே தேடிவரும்
தொலைந்த உன் நிம்மதி

**'நிம்மதியை நாம் தொலைத்து விடவில்லை
நமக்குள் அது தொலைந்து கிடக்கின்றது'**

**ஆக்கம்: திருமதி. பிலிப் நளினா
செல்வநாயகபுரம்**

### வாசகர்களே!

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளை ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு படுத்துகின்றோம்

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | - 2500.00 |
| | 1/2 பக்கம் | - 5000.00 |
| கலர் | 1/4பக்கம் | - 3750.00 |
| | 1/2 பக்கம் | - 7500.00 |

## மரமொன்றின் கதையொன்று

அருட்பணி N.C அருள்வரதன்

- கவிதைவரிகளைச் சரியாக நிரைப்படுத்துங்கள்
- பலரும் சரியாக நிரைப்படுத்தினால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

1ம் பரிசு: 400/=
2ம் பரிசு: 300/=
3ம் பரிசு: 200/=

பார்ப்போர் கண்களை ஈர்ந்து நின்று
திருப்தியாய் உண்ணக் கொடுத்த மரம்
பசுமைகள் நிறைந்த நிலைகளிலே
தேடி வருவோர் மகிழ்வு கொள்ள
கிளைகளில் நிறைந்த கனிகளுடன்
வாடிப்போயது வரண்டு இன்று
ஏங்கியே தனிமையில் நிற்கிறதே
எட்டிப்பார்க்கவும் யாருமில்லையே
பட்டுப்போயது நிற்கையிலே
பட்ட மரங்களின் கதைகள்தான் இவை

**முடிவுத் திகதி 31. 05. 2015
அனுப்ப வேண்டிய முகவரி:-
மரமொன்றின் கதையொன்று
திருமலைத்தீபம்
297 டொக்கியாட் வீதி,
திருகோணமலை.**

## குட்டிக் கதை



Fr.NC

இரண்டு மரங்கள் அருகருகே நிற்கின்றன. ஒன்று நிறைந்த காய்களுடன் நிற்கின்றது. மற்றது காயே இல்லாத மரம். காய்க்காத மரம் காய்த்த மரத்திற்கு அவ்வழியே வருகிறவர் போகிறவரெல்லாம் கம்புகளாலும் கற்களாலும் எறிந்து காய்களைப் பறித்துக்கொள்வார்கள். காய்க்காத மரத்திற்கு கல்லெறியுமில்லை கம்பெறியுமில்லை அதனால் மரத்திற்கு காயங்களுமில்லை.



காய்த்த மரத்திற்கே கல்லெறி என்பதில் எத்தனை உண்மைகள். மரத்திற்கு மட்டுமா கல்லெறி. **-சிந்திப்போம்-**

**'எந்த மனிதனையும் அவன்
முதுமையில் புறக்கணிக்காதே;
ஏனென்றால் நம்மைப்போல்
இருந்தல்லவோ அவன்
முதியவனானான்'**

## அன்பு



அதிகமாக தேவைப்படும் பொருள்
அதிகமாகப் பேசப்படும் சொல்
பொதுவாக மறக்கப்படும் செயல்

## சிந்திக்க... சிரிக்க...



உறுதிபூசுதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆயருக்கு முன் வந்து நின்றான் அவனைக் கண்டவுடன் ஆயருக்கு சந்தேகம் வந்தது.

ஆயர் அவனைப் பார்த்து, "ஏற்கனவே உனக்கு உறுதிபூசுதல் தந்து விட்டேனே" என்றார்.

அதற்கு அச்சிறுவன் அருகிலிருந்த குருவைச் சுட்டிக்காட்டி, "ஒவ்வொரு முறை நான் உறுதிபூசுதல் எடுக்கும் போதும் இந்த சாமி வந்து துடைத்துப் போடுகிறார்" என்றான்.

**நன்றி: தோழன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திக்கும் திருப்பாடல் 98

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

**ஆண்டவரே என் ஆயர்**

**1 - 4: ஆண்டவர் என் ஆயர்**

1. ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை.
2. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர் நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.
3. அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்; தம் பெயர்க்கேற்ப எனை நீதி வழி நடத்திடுவார்;
4. மேலும், சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.

**5 - 6: ஆண்டவர் எனக்கு விருந்து அளிப்பவர்**

5. என்னுடைய எதிரிகளின் கண்முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்; என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்; எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது.
6. உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும்; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.

**"திருப்பாக்களில் முத்து"** என்று அழைக்கப்படும் இப்பாடல் அனைத்துக் கிறிஸ்துவர்களாலும் போற்றற்கரிய சொத்தாகப் புகழ்ந்து பாடப்படும் ஒன்று. எழில்மிக்க இத்திருப்பா ஆண்டவரின் அன்பை இரு உருவங்கள் வழியாகத் தெளிவுறுத்துகிறது அவை:

1-4: ஆயரின் உருவகம்;

5-6: விருந்தளிப்போர் உருவகம் ஆகும். மேலும் இங்கு மூன்று உருவகங்களைக் காண்கின்றனர்:

1-2: ஆயர்; 3-4: வழிகாட்டுபவர்; 5-6: விருந்தளிப்போர். இதில் பாடகரின் நம்பிக்கையைக் கோடிட்டுக் காட்டுதல் இன்றியமையாதது. மூன்று கோணங்களிலே தம் நம்பிக்கையைப் பாடகர் வெளியிடுகிறார்.

1. எனக்கேதும் குறையில்லை; 2. எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; 3. ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். மேலும், ஆசிரியரின் நம்பிக்கையிலே ஒரு வளர்ச்சி தென்படுகிறதையும் காணல் வேண்டும்.

**"நான் - அவர்"** என்ற உறவில் பாடப்பட்ட பாடல் நான்காம் வசனத்தின் பின்பகுதியிலிருந்து **"நான் - நீர்"** என்று உறவிலே ஒரு வளர்ச்சியையும் நெருக்கத்தையும் காட்டுகிறது. இம்மாற்றமும் இப்பாடலுக்குப் புது மெருகூட்டுகிறது எனலாம்.


**செபிப்போம்:**

**"நல்ல ஆயன் நானே","வாழ்வு தரும் உணவு நானே","வழியும் உண்மையும் வாழ்வும் நானே"** என்று கூறிய நம் ஆண்டவர் இயேசு பழைய ஏற்பாட்டு உருவகங்களைத் தம்மீது ஏற்றிக் கூறினார் என்பதைவிட, அவர் உண்மையாகவே தம் ஆடுகளுக்காகத் தம் உயிரையே கொடுப்பவர், அவர் உண்மையாகவே நம் வழித் துணையாயிருப்பவர், அவர் உண்மையாகவே விருந்தளிப்பவர், அவரே எல்லாம் என்பதை உணர்ந்து அவரிடம் நம்மைச் சரண் அடையச் செய்வோம்.

**(நன்றி: ஆர். சே. இராசா. யே.ச.)**

**தொடரும்...**

## விவிலியமும் திருமுழுக்கு என்கிற அருளடையாளமும்



**முன்னுரை**

ஆண்டவர் இயேசு தமது விண்ணேற்றத்திற்கு முன் தம் சீடர்களிடம், **"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்"** (மத் 28:19) என்று அறிவுரை கூறியதாக மத்தேயு தன் நற்செய்தி நூலில் குறிப்பிட்டுள்ளார். மாற்கு எழுதிய நற்செய்தி நூலில் **"நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெறுவோர் மீட்பு பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்பு பெறுவார்"** (மாற்கு 16:16) என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். மேற்குறிப்பிட்டுள்ள இயேசுவின் இரண்டு கட்டளைகளும் திருமுழுக்கினை வலியுறுத்திப் பேசுகின்றன என்பதற்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. இயேசு தம் சீடர்களிடத்தில் இறுதி அறிவுரையை வழங்கி, தம்மால் நிறுவப்பட்டுள்ள இறையரசைச் சார்ந்த மக்கள் திருமுழுக்கின் வழியாகத் தங்களையே கடவுளுக்கு முழுவதுமாக அர்ப்பணித்து மகிழ்ச்சியான வாழ்வில் ஈடுபடுமாறு அன்புடன் அழைக்கிறார். திருமுழுக்கு என்கிற அருளடையாளமானது இயேசுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றுள்ள காரணத்தினால், அது அவருடைய நீடித்த பிரசன்னத்தை மானிடராகிய நமக்கு மிகச் சிறப்பான முறையில் உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

"திருமுழுக்கு" பற்றி நாம் ஆராய்கிற போது, அதன் உட்பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. திருமுழுக்கு என்கிற பொருள் கொண்ட **"பாப்டிஸம்"** என்கிற ஆங்கில வார்த்தை "பாப்டிட்சைன்" என்கிற கிரேக்கச் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. "பாப்டோ" என்றால் "மூழ்குதல்" அல்லது "அமிழ்த்துதல்" என்று அர்த்தம். சடங்கு முறையில் ஒருவர் தம்மைக் கழுவிக்கொள்தல் என்பது கி.பி. முதலாம் நூற்றாண்டில் சில மாதங்களில் நடைமுறையில் இருந்த பழக்கம் என்றறிகிறோம். வெளிப்புறத்தை தூய்மைப்படுத்தும் சடங்காக இருந்தாலும், அது உணர்த்துவது உட்புறத் தூய்மையைத்தான் என்பது தெளிவு. பழைய வாழ்க்கை முறையைக் களைந்துவிட்டுப், புதிய நெறிகளைக் கடைபிடித்து, புது வாழ்வைத் தொடங்கும் விதத்தில் தண்ணீரில் மூழ்கும் சடங்கு பயன்படுத்தப்பட்டது. திருமுழுக்கு பற்றி பேசுகிறபோது அது இறைவனின் அருளைப் பெற்றுதரும் ஓர் அரிய சாதனம் என்று வருணிக்கப்பட்டுள்ளது. புகுமுக அடையாளங்களில் ஒன்றாகிய திருமுழுக்குப் பற்றி மிக ஆழமாகத் தெரிந்து கொள்வதற்கு விவிலிய ஆதாரங்கள் ஏராளமாய் உள்ளன. அவற்றைப் பற்றிச் சற்று விரிவாக இக்கட்டுரையில் காணலாம்.

**பழைய ஏற்பாட்டில் திருமுழுக்கு**

திருமுழுக்குப் பற்றியும், அது எவ்வாறு செயற்படுத்தப்பட்டது என்பது பற்றியும் பழைய ஏற்பாட்டில் நேரடித் தொடர்பு கொண்ட ஆதாரம் இல்லை என்றாலும், சில அடையாளச் செயல்கள் மற்றும் நிகழ்வுகள் திருமுழுக்கு அருளடையாளத்தை நமக்கு முன்னுணர்த்தும் செயல்களாகப் பார்க்கப் படுகின்றன. பாஸ்காத் திருவிழிப்பின் போது திருமுழுக்குத் தண்ணீர் புனிதப்படுத்தப்படும்போது, மீட்பின் வரலாற்றில் திருமுழுக்கு என்கிற மறைபொருளுக்கு முன் அடையாளமாகத் திகழ்ந்த சில நிகழ்வுகள் நினைவு கூரப்படுகின்றன. உலகம் தொடங்கியது முதல் இன்றுவரை, மிகச் சாதாரணமாக நம் கண்களுக்குத் தென்படுகிற தண்ணீரானது, அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு மருந்தாகவும், மிகுந்த பலன் தரக்கூடிய தோற்றமும் திகழ்கின்றது. என்று சொல்வது நிச்சயமாக மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் உருவாக்கப் படுவதற்கு முன்னரே அங்கிருந்த நீர்திரளின் மேல் கடவுளின் ஆவியார் அசைவாடிக் கொண்டிருந்தார். (தொ.நூ 1:2) என்று தொடக்கநூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, உலகம் உருவாக்கப்படவிருந்த சூழ்நிலையில், கடவுளின் ஆவி நீரின்மேல் தம் மூச்சுக் காற்றை ஊதி, அதன் மூலம் தண்ணீரைப் புனிதத்தின் ஊற்றாக மாற்றினார்.

நோவாவின் பெட்டகமானது, திருமுழுக்கு என்கிற அருளடையாளத்திற்கு ஒரு சிறந்த முன்னோடி நிகழ்வு என்று சொல்லிக் கொள்ளலாம். அதாவது, நோவாவும் அவரது குடும்பத்தினரும் தண்ணீரால் ஏற்படவிருந்த மாபெரும் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். அது போலவே, பாவத்தின் கொடூரத்தினால் அலைக்கழிக்கப்பட்டு, அழியக் கூடிய நிலையிலிருந்த மானிடர், திருமுழுக்கின் வழியாகக் கடவுளின் குழந்தைகளாக மாறி, அவர் தரும் அருளைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். ஆகவேதான், நோவாவின் பேழையின் மூலம் எட்டுப்பேர் தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர். என்று தூய பேதுரு தன் திருமுகத்தில் எழுதியிருக்கிறார் (1பேதுரு 3:20).

நாணற்கடலை (செங்கடல்) இஸ்ரயேலர் கடந்து செல்லும்வரை அவர்கள் நிச்சயமற்ற ஒரு நிலையைத்தான் தங்கள் உள்ளங்களில் உணர்ந்திருப்பர். எகிப்தியரிடமிருந்து எந்த நேரத்திலும், எப்படி வேண்டுமானாலும் மிகப்பெரிய தாக்குதல் ஏற்பட வாய்ப்பிருந்ததை இஸ்ரயேலர் அறிந்து கொண்டு, அதன் காரணமாக, அவர்கள் மிகவும் அஞ்சி நடுங்கியிருந்திருக்க வேண்டும். ஆனால் கடவுளின் உடனிருப்பை அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் அனுபவித்துக் கொண்டு, அந்தக் கடலை அவர்கள் கடந்தனர் (வி.ப 14). நாணற்கடலை அவர்கள் கடந்ததனால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர். ஆனால் அந்தக் கடலை கடக்க முயன்ற எகிப்தியப் படையினர் முழுவதுமாக அழிக்கப்பட்டனர். இது இறைவனால் வழிநடத்தப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு மகத்தான வெற்றி. அதைப் போலத்தான் இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப் பட்ட கானான் நாட்டில் குடியிருப்பதற்கு முன்பாக யோர்தான் ஆற்றினைக் கடக்க வேண்டியிருந்தது (யோசு 3). அந்த ஆற்றை அவர்கள் கடந்தவுடன் புதுப்பொலிவு மற்றும் புது நம்பிக்கையைப் பெற்றனர். அதாவது அவர்களுக்கு மிகப்பெரும் சவாலாக இருந்த யோர்தானை இறைவனின் துணைகொண்டு அவர்களால் கடக்க முடிந்தது. அதனால் அவர்கள் முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட மனநிலையுடன் அந்த நாட்டில் குடியிருக்க முடிந்தது. அதைப்போன்றுதான், திருமுழுக்குத் தண்ணீரால் கழுவப்பட்டுத், தூய்மையாக்கப்படும் ஒருவர் தூய ஆவியினால் இறைவனின் குழந்தையாகத் தத்தெடுக்கப்படும் போது, அவரது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுகிறது. அவரது வாழ்வின் பயணத்தில் மாபெரும் மாற்றம் ஏற்படுகிறது.

மொத்தத்தில் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் வெறும் அடையாளங்கள்தான் ஆனால் இந்த அடையாளங்கள் இயேசுவின் மீட்புச் செயல்களில் அர்த்தம் பெற்றன என்றறிகிறோம். இயேசுவின் பணிவாழ்வு, அவரது போதனைகள் மற்றும் அவரது மீட்புச் செயல்கள் இல்லையென்றால், பழைய ஏற்பாட்டு அடையாளங்கள் யாவும் சாதாரண நிகழ்வுகளாகவே உணரப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தொடரும்.....

**நன்றி: விவிலிய விருந்து**

# மரியாவின் மாதம்



மே மாதம் என்றாலே வணக்க மாத நவநாள் என்பது நம் நினைவிற்கு வரவேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம் இல்லங்களில் தினமும் செபமாலை செபித்து, விவிலியம் வாசித்துச் செபிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

நம் பிள்ளைகளுக்குப் பல பயிற்சிகளை கற்றுக் கொடுக்கும் நாம், பிள்ளைகளின் ஆன்மீக வாழ்விற்குத் தேவையான ஆன்மீகப் பயிற்சியான கூடிச் செபிக்கும் முறையை கற்றுக் கொடுப்போம். அன்னைமரி வழியில் குடும்பமாகச் செபித்துக் கோடி நன்மை பெறுவோம்.

## திருவிவிலியத்தில் தூய ஆவியைக் குறிக்கும் அடையாளங்கள்

**நீர்:** ஆவியானவரின் புதுப்பிறப்பளிக்கும் அடையாளமாக நீர் பயன்படுத்தப்படுகின்றது. திருமுழுக்கில் நாம் ஆவியானவரின் செயலால் பாவங்களுக்கு இறந்து கிறிஸ்துவில் புதுவாழ்வு பெறுகின்றோம். நாம் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாகித் திருமுழுக்குப் பெற்று ஒரே ஆவியால் தாகந்தணியப் பெறுகின்றோம். **"யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்... (யோவான் 7: 35-37)**

**தீ:** நீர் புதுபிறப்பளித்துக் காப்பது போல் "தீ"யானது ஆவியானவரின் உருமாற்றும் சக்தியைக் குறிப்பதால் ஆவியானவருக்கு அடையாளமாகிறது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எலியா நெருப்பைப் போல் எழுந்து செபிக்கிறார். அவரது வார்த்தை தீப்பந்தம் போல் பற்றி எரிந்தது (சீ.ஞா 48:1) இந்த நிகழ்ச்சியில் ஆவியானவர் தீப்பந்தம் போல் காட்சியளித்து உருமாற்றம் பெறச் செய்கிறார். புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவான் "எனக்குப் பின் வருபவர் தூய ஆவியாலும், நெருப்பாலும் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுப்பார். பெந்தகோஸ்து நாளில் நெருப்புப் போன்ற நாவுகள் தோன்றி பிளவுண்டு ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கின என்பது ஆவியானவர் தீ வடிவில் செயல்பட்டதைக் குறித்து நிற்கின்றது.

**ஒளியும் மேகமும்:** ஒளியும், மேகமும் இறைவனின் உயிருள்ள பிரசன்னத்தை, அவரது தன்னிகரற்ற மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன. இவையிரண்டும் ஆவியானவரின் அடையாளங்களாகும்.
மோசே நாற்பது நாள் மலையில் இருந்தபோதும் (விப 33: 1 - 10, 40: 36 - 38, 1 கொரி 10: 1 - 2) ஆவியானவர் மேகத்தின் வடிவில் வருகிறார். புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் மரியாவின் மீது இறங்கி உன்னதரின் வல்லமையை நிழலாடச் செய்கிறார்.

**முத்திரை:** இந்த அடையாளம் அபிசேகத்தை ஒத்தது. இறைவன் தீர்ப்பிடும் அதிகாரத்தை இறைமகனுக்கு அளிக்கிறார். ஏனெனில் அவர் மனுமகன். (யோ 6:27) இது இறைச் செயல்பாட்டின் அழியா முத்திரையைக் குறிக்கிறது. திருமுழுக்கு உறுதிப்பூசுதல், குருத்துவம் என்பன அழியா முத்திரையை எமக்கு அளித்து நிற்கின்றது.

**கை:** கைகளைப் பிறர் மீது வைத்தல் என்பது ஆற்றலைப் பிறருக்கு அளிப்பதைக் குறிக்கிறது. இயேசு நோயாளிகள் மீது கைகளை வைத்துக் குணமாக்கினார். குழந்தைகள் மீது கைகளை வைத்து ஆசீர்வதித்தார். (மாற் 6/5, 8/23 10/16) இயேசுவைப் போலத் திருத்தூதர்களும் கைகளை வைத்துக் குணமாக்கினார்கள் (தி.ப 08: 17-19, 13:3,19:6). திருச்சபை இந்த அடையாளத்தைத் திருவருட்சாதனங்களிலும், திருப்பலியிலும், பயன்படுத்துகிறது. கைகளை வைப்பதால் ஆவியானவர் இறங்கி வருகிறார்.

**புறா:** புது வாழ்வைக் குறிக்கிறது. நோவா பெட்டகத்திலிருந்து புறாவைப் பறக்க விட்டுத் தண்ணீர் வற்றிவிட்டதா என அறிகிறார். (தொ.நூ 8: 8 - 12) புறா புது வாழ்வு தொடர்வதைக் குறிக்கிறது. இயேசு திருமுழுக்குப் பெறும்போது ஆவியானவர் புறாவடிவில் இறங்கி அவரில் தங்குகிறார் (மத் 3: 16). இதைப் போலவே திருமுழுக்குப் பெற்ற அனைவர் மேலும் ஆவியானவர் புறா வடிவிலே வந்து தங்குகிறார்.

நன்றி தோழன்

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## மறைமாவட்ட அன்பியப் பேரணி - 2015

திருகோணமலை மறைமாவட்டத்தின் 2015ம் ஆண்டிற்கான அன்பியப் பேரணியானது சித்திரை மாதம் 18ம் திகதி மறைமாவட்ட ஆயர் அதி. வந். கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி இ. யூட் சர்வானந்தன் அவர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் மிகப் பிரம்மாண்டமான அளவில் முன்னெடுக்கப்பட்டது. இதில் தேசிய அன்பிய வளவாளர் மற்றும் தேசிய இயக்குனர் அவர்களுடன் எமது மறைமாவட்டக் குருக்களும், மறைமாவட்டப் பங்கு இறை மக்களும் இணைந்து சிறப்பித்தனர்.

இப் பேரணிக்கு மறைமாவட்ட ஆயர் அதி. வந். கலாநிதி. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தனராக தேசிய அன்பிய இயக்குனர் அருட்பணி லைலி பெர்னாண்டோ அவர்களும், ஆசிய அன்பிய வளவாளர் அருட்பணி றொகான் டொமினிக் அவர்களும், சிறப்பு விருந்தினராக எமது மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட் அவர்களும், மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதி அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்களும், சீனன்குடா பங்குத்தந்தை அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்க அவர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

ஆயர் இல்லத்தில் ஆயர் அவர்கள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்த இப் பேரணியானது குழந்தை இயேசு ஆலய மறைக்கல்வி மாணவர்களின் Band அணிவகுப்புடனும், அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட இறை மக்களும் அதனைத் தொடர்ந்து ஆயர், குருக்கள் சகிதம் குழந்தை இயேசு ஆலய மழலை அரங்கை அடைந்தது. தொடர்ந்து மறைமாவட்டப் பங்குகளில் காணப்படும் அன்பியங்களின் கலை கலாச்சார நிகழ்வுகளும், விருந்தினர் கௌரவிப்புகளும் இனிதே நடந்தேறியன.

இறுதியில் ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் 2015ம் ஆண்டிற்கான மறைமாவட்ட அன்பியப் பேரணியானது மிகவும் சிறப்பாக நிறைவுற்றது.

**அருட்பணி இ. யூட் சர்வானந்தன்,**
**மறைமாவட்ட அன்பிய இயக்குனர்,**
**திருகோணமலை மறைமாவட்டம்.**

## இலிங்கநகர் தூய யோசேப்வாஸ் மூப்பர் அமைப்பினரின் சிரமதானப் பணி

திருகோணமலை மின்சார நிலைய வீதியில் மானாங்கேணி கத்தோலிக்க சேமக்காலையில் உவர்மலை இலிங்கநகர் பங்குக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை பொறுப்பேற்றுக் கடந்த தை மாதம் தொடக்கம் உவர்மலை, இலிங்கநகர், பங்குத்தந்தை அருட்பணி யூட்சர்வானந்தன் அவர்கள் தலைமையில் இலிங்கநகர் தூய யூதா ததேயு ஆலயத் தூய யோசேப் வாஸ் மூப்பர் அமைப்பினர் சிரமதானப் பணியில் ஈடுபடுவதையும் பங்குத்தந்தை அருட்பணி யூட்சர்வானந்தன் அவர்கள் மேற்பார்வை செய்வதையும் படத்தில் காணலாம்.

## திருகோணமலை மறைமாவட்டத்தில் "ஆச்சேஸ்" விழா

திருகோணமலை மறைமாவட்டத்தில் மரியாயின் சேனை சகோதரிகளால் 25. 04. 2015 அன்று காலை தூய மரியாள் பேராலயத்தில் ஆச்சேஸ் விழா கொண்டாடப்பட்டு வாக்குறுதிகள் புதுப்பிக்கப்பட்டன. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் தலைமையில் விசேட கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னை மரியாவின் அடிச்சுவட்டினை பின்பற்றி எமது மறைமாவட்டத்தில் மரியாயின் சேனையின் செயற்பாடுகள் மேன்மேலும் வளர வேண்டுமென மன்றாடியதோடு, இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்த குருக்கள், அருட்சகோதரிகள், மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் ஆன்மீக இயக்குனர் சார்பாக மரியாயின் சேனை சகோதரிகள் மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் கருத்தரங்குகள்

எம் நாட்டில் பாடசாலைகளில் நிலவும் கத்தோலிக்க ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்க, அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது. 27.02.2015 அன்று வெளியான இவ் அறிவித்தலின் படி நாடு முழுவதும் இருந்து தகுதியானோர் தேர்ந்து கொள்ளப்பட்டு, அரச ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

எனவே எம் இளையோருக்கு இவ்வரிய சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் முகமாக முன்னாயத்தக் கருத்தரங்குகள் எமது மறைக்கல்வி நிலையத்தினூடாக நடைபெறுகின்றன.

முதலாவது கருத்தரங்கு இவ்வருடம் ஏப்ரல் மாதம் 25ம் திகதி இடம்பெற்றது. இது அன்றைய தினம் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட தூய ஜோசேப் வாஸ் மண்டபத்தில் இடம் பெற்றது. மறைமாவட்ட ஆயர் தமது உரையில் இதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார். இது தொடர்பான விளக்கவுரையினை அருட்பணி போல் றொபின்சன் அவர்கள் வழங்கினார்.

**இக்கருத்தரங்குகள் பின்வருமாறு இடம்பெறும்: மாதத்தின் ஒவ்வொரு இரண்டாம், மூன்றாம், சனிக்கிழமைகளில் மாலை 3.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை விவிலியம் தொடர்பான கருத்தரங்குகள் இடம் பெறும். மாதத்தின் ஒவ்வொரு நான்காம் சனிக்கிழமைகளிலும் காலை 08.30 தொடக்கம் மாலை 04.30 மணிவரையும் பொதுக்கருத்தரங்குகள் (முழுநாள்) நடைபெறும்.**

**இடம்: திருமறைக்கல்வி நடுநிலையம், திருகோணமலை.**

பொதுக்கருத்தரங்கின் முடிவில் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும். இறுதிநாள் கருத்தரங்கில் முன்னோடிப் பரீட்சை தோற்றுவோரின் நலன் கருதி இடம்பெறும்.

மேலதிக தகவல்களைப் பங்கு குருக்களிடம் அல்லது திருமறைக்கல்வி நடுநிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அருட்பணி சீ. றோ. ஜெயரெத்தினம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தையொட்டிய பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் செய்தி



அருட்பணி. ஏ. றொகான் பேனாட்,
இயக்குனர், சமூகத் தொடர்பு ஆணைக்குழு.

**"எங்களை வழிநடத்தும்" இந்த உறவின் அனுபவமானது, மிகவும் அடிப்படையான தொடர்பாடல் வடிவமான செபம் கையளிக்கப்படும் அமைவிடமாக எமது குடும்பங்களை மாற்றியமைக்கின்றது,**

குடும்பத்தை தொடர்புபடுத்தல்: அன்பின் தெய்வத்தைச் சந்திக்கின்ற வரப்பிரசாதமான இடம் குடும்பம் என்பது திருச்சபையின் ஆழமான சிந்தனைக்குரிய விடயமும், சமீபத்திய வழைமைக்கு மாறான ஆயர் மன்றம் மற்றும் அடுத்த ஒக்டோபரில் நடக்க ஏற்பாடாகியிருக்கும் வழமையான ஆயர் மன்றம் ஆகிய இரண்டினதும் படிமுறை சம்பந்தப்பட்டதுமாகும். எனவே அடுத்த உலக தொடர்பாடல் தினத்திற்கான கருப்பொருள் குடும்பம் என்பதைத் தனது கருத்துக் குவிமையமாகக் கொண்டமைதல் பொருத்தமாகவிருக்கும் என்று நான் யோசித்தேன். எல்லாவற்றையும் விட குடும்பம் என்கின்ற பின்னணியில்தான் நாம் எப்படி தொடர்புபடுவது என்பதைக் கற்றுக் கொள்கின்றோம்.

இந்த அடிப்படையில் கருத்துக் குவிப்பதானது எமது தொடர்பாடலை மேலும் உண்மையுள்ளதும், மனிதத் தன்மை கொண்டதுமாக அமைக்க உதவும் அதே சமயம், எங்கள் குடும்பத்தைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கவும் உதவும்.

மரியாள் எலிசபெத் அம்மாளைச் சந்தித்தமை தொடர்பாக லூக்கா 1: 39 - 56 சொல்லும் வாசகம் தரும் செய்தியிலிருந்து நாம் உந்துதல் பெற்றுக் கொள்ள முடியும்.

"எலிசபெத் மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டவுடனே, அவள் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது, எலிசபெத் தூய ஆவியினால் நிரப்பப்பட்டவளாய் சத்தமிட்டுச் சொன்னதாவது. "பெண்களுக்குள்ளே மிகவும் ஆசிர்வதிக்கப் பட்டவள் நீரே, உமது வயிற்றின் கனியும் ஆசீர நிரம்பப் பெற்றதே "(லூக் 1:41-42)

இந்த நிகழ்வானது எவ்வாறு தொடர்பாடலானது உடலின் மொழியுடன் பின்னிப் பிணைந்த ஒரு உரையாடல் என்று முதலில் எடுத்துக் காட்டுகிறது. மரியாளின் வாழ்த்துக்கு முதல் பிரதிபலிப்பானது எலிசபெத்தின் கருவறையிலிருந்து அக்களிப்பால் துள்ளிய குழந்தையினாலே காட்டப்படுகின்றது. ஒரு வகையில் மற்றவர்களைச் சந்திக்கின்றபோது ஏற்படும் மகிழ்ச்சியானது, நாம் பிறக்கு முன்னமே கற்றுக் கொண்டுள்ளபடி, ஏனைய அனைத்து தொடர்பாடல் வடிவங்களினதும் மாதிரிகையும், அடையாளமுமாகும். எங்களைத் தாங்கி நிற்கும் "கருவறையானது"

செவிமடுத்தலுக்கான இடமாகவும், தொடுகை மூலம் பாதுகாப்பான சுற்றாடலில் இருந்து கொண்டு, அன்னையின் இதயத் துடிப்பின் ஓசை தரும் நம்பிக்கையுடன் வெளி உலகுடன் எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதற்கு முதல் பாடசாலையாக அமைகின்றது, இரண்டு நபர்களுக்கிடையிலான இந்த சந்திப்பு இருவரதும் தனித்துவம் குறைவுபடாமல், நெருக்கமாக உறவு கொள்ளச் செய்வதுடன், நிரம்ப உத்திரவாதங்களை உள்ளடக்கிய சந்திப்பாகவும் அமைந்து, எமது முதல் தொடர்பாடல் அனுபவமாகவும் உருவாகி விடுகிறது. தத்தம் தாயின் வயிற்றினின்றும் உதித்து வந்தவர்கள் என்கின்ற வகையில் இந்த அனுபவத்தில் நாம் அனைவருமே பங்கு கொள்கின்றோம்.

நாம் இந்த உலகிற்குள் வந்தபின்னரும் கூட, ஒரு வகையில் குடும்பம் என்கின்ற "கருவறையில்" தான் இருக்கின்றோம். இது ஒருவரோடொருவர் உறவுள்ள பல நபர்களால் ஆன கருவறையாக இருக்கிறது: "ஒரு குடும்பத்தில் வேறுபாடுகள் பல இருப்பினும், மற்றவர்களுடன் வாழப் பழகுகிறோம்"
(Evangelii Gau dium - The Joy of the Gospel - 66)
தமக்கிடைய பால் மற்றும்வயது வேறுபாடுகளிலிருப்பினும், குடும்ப உறுப்பின்கள் தமக்கிடையேயுள்ள இணைப்பின் காரணத்தால் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த உறவு முறைகள் விரிவடையும் போது, வயது வேறுபாடுகள் அதிகரிக்கும்போது, எமது வாழ்க்கைச் சுற்றாடலானது மிகவும் வளமுள்ளதாக அமைகின்றது. மொழியின் வேரிலே அமைகின்ற இந்த பிணைப்பானது அந்தப் பிணைப்பையே பலமுள்ளதாக்குகிறது. நாங்கள் எமது மொழியை உருவாக்குவதில்லை. அதை நாம் பெற்றுக் கொண்டதினால் அதை நாம் எங்கள் குடும்பத்திலேயே நாம் எமது "தாய் மொழி"யை - நமக்கு முன் சென்றவர்களின் மொழியை பேசிப் பழகுகின்றோம் (2 Macc 7:25, 27). எமது குடும்பத்தில் நமக்கு முன் சென்றவர்கள் இருக்கிறார்கள், பயன்படுத்துகின்றோம்.

அவர்கள் எங்கள் இருப்பை உறுதிப்படுத்தி நாம் எமது முறைக்கு உயிர்களை உருவாக்குவதுடன் ஏதாவது நன்மையானதாகவும் அழகாகவும் செய்து நிற்கப் பண்ணியிருக்கிறார்கள். நாங்கள் பெற்றுக் கொண்டதால் வழங்கவும் முடியும். இந்த பெறுமதிமிக்க சுற்றுவட்டம் எமது குடும்பங்களில் தம் குடும்ப உறுப்பினர்களுடனும், ஏனையோருடனும் தொடர்பாடும் தகமையின் இதயத்தில் அமைகின்றது. இன்னும் பொதுவாக, இதுவே அனைத்து தொடர்பாடல்களுக்கும் ஒரு மாதிரிகையாக அமைகின்றது.

எமக்கு "வழிகாட்டும்" இந்த தொடர்பாடல் அனுபவமானது மிகவும் அடிப்படையான தொடர்பாடல் வடிவமான செபத்தை தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கும் பின்னணியாக குடும்பங்களை ஆக்குகின்றது. பெற்றோர் தமது பிறந்த குழந்தைகளை துயில் கொள்ள வைக்கின்றபோது அவர்கள் அடிக்கடி அக் குழந்தைகளை இறைவனிடமே ஒப்படைத்து அவர்களைப் கண்காணிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றார்கள். குழந்தைகள் கொஞ்சம் வளர்ந்ததும், பெற்றார் சில எளிமையான செபங்களைத் தமது பாட்டன், பாட்டி, உறவினர்கள், நோயாளிகள், துன்பப்படுவோர், கடவுளின் உதவியை வேண்டுவோர் போன்ற ஏனையோரை அன்போடு மனதிற்கொண்டு செபிக்கச் சொல்லித் தருகின்றார்கள். எங்கள் குடும்பங்கிளிலேதான் எம்மில் பெரும்பாலானோர் எமது தொடர்பாடலின் சமயப் பரிமாணங்களைக் கற்றுக் கொண்டோம். அவை கிறீஸ்தவத்தைப் பொறுத்தமட்டில் இறைவன் எம்மீது பொழிந்தருடிய நாம் மற்றவருக்குப் பகிர்ந்து வழங்கும் அன்போடு இரண்டறக் கலந்து அமைகின்றது.

குடும்பத்தில் நாம் ஒருவரையொருவர் அரவணைக்கவும் ஆதரிக்கவும் கற்றுக் கொள்ளுகின்றோம். முகபாவனையை வேறுபடுத்தி உணருகின்றோம், அமைதியின் பொழுதுகளை விளங்கிக் கொள்கின்றோம், இது வரை ஒருவரையும் தெரிந்து கொள்ளாவிடினும், மற்றவருக்கு முக்கியமாகத் தென்படும் ஏனையவரோடு சேர்ந்து சிரிக்கவும் அழவும் செய்கின்றோம், இது நெருக்கத்தை உருவாக்கவும், அடையாளங்கண்டு கொள்ளவுமான தொடர்பாடலின் கருத்தினைப் புரிந்து கொள்ள எமக்குப் பெருமளவில் உதவுகிறது. ஒருவரை நெருங்குவதன் மூலமாக எமக்கிடையிலான தூரத்தை குறைக்கின்ற போதும், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுகின்ற போதும் நாங்கள் நன்றியுணர்வையும், மகிழ்ச்சியையும் அனுபவிக்கின்றோம். மரியாளின் வாழ்த்தும், குழந்தையின் அசைவும் எலிசபெத்திற்கு ஆசீராக அமைகின்றன, அவை பின்னர் மரியாள் தனக்கும் தன் மக்களுக்கும் இறைவன் தம் மனதிற் கொண்டிருக்கும் அன்பின் திட்டத்தைப் புகழ்ந்து வருணிக்கும் அற்புதமான இறைபுகழ் பாடலால் (Magnificat) தொடரப்படுகின்றன. விசுவாசத்தோடு உச்சரிக்கப்படக் கூடிய ஒரு "ஆம்" என்கின்ற சொல்லானது எம்மை மட்டுமல்ல, இவ்வுலகில் நாம் கொண்டிருக்கின்ற இடத்திற்கும் மேலானவர்களாக எம்மை மாற்றும் சக்தி கொண்டது, "சந்திப்பு" என்பது எமது சிறிய உலகுக்குள்ளே எம்மைச் சிறைப்படுத்தி வைத்திராமல், மற்றவர்களை நோக்கிச்செல்லும் படியாக வாசற் கதவுகளைத் திறப்பது என்பதாகும், அவ்வாறே குடும்பம் ஒன்று தன்னைத் தாண்டி அடுத்தவர் நோக்கிச் செல்லும் போது உயிரோட்டமுள்ளதாக மாறி அமைகின்றது. ஒரு குடும்பம் தனது வாழ்வு மற்றும் ஒன்றிப்புச் செய்தியை இவ்வாறு தொடர்பாடல் மூலம் வெளிக்கொணரும் போது, சுபைத்தில் நலிவடைந்த குடும்பங்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்றபோது, குடும்பங்களின் குடும்பமான திருச்சபையைத் தானாக உருவாகச் செய்கிறார்கள்.

தொடரும்...

# இட அறிமுகம்

**கலிலேயாக் கடல்:-**

கலிலேயாப் பகுதியில் உள்ள பெரும் நீர்நிலை "கலிலேயாக் கடல்" என்று அழைக்கப்படுகிறது. கடல் என்று அழைக்கப்பட்டாலும் இது ஒரு பெரிய ஏரி தான். இக்கடல் 21 கிலோ மீற்றர் நீளமும், 11 கிலோ மீற்றர் அகலமும், 45 மீற்றர் ஆழமும் கொண்டது. இக்கடல் நல்ல நீரைக் கொண்டது. குடிக்க இனிமை யானது. இக்கடலில் ஏராளமான மீன்கள் உள்ளன. வடக்கிலிருந்து வரும் யோர்தான் நதி இவ்வேரியை நிரப்பி விட்டு தொடர்ந்து தெற்கு நோக்கி ஓடிச் சாக்கடலில் கலக்கின்றது.

இக்கடலைச் சுற்றிச் சிறியதும், பெரியதுமான பல ஊர்கள் இருகின்றன. திருநூலில் இக்கடல் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதற்கு கின்னரத் ஏரி, கெனசரேத் ஏரி, கலிலேயாக் கடல், திபேரியாக் கடல் என்று பல பெயர்கள் உண்டு. இயேசுவின் பணி வாழ்வின் போது, இக் கடலில் அல்லது இக் கடல் அருகில் நடந்த பல நிகழ்ச்சிகளை நற்செய்திகளில் வாசிக்கின்றோம்.

**திபேரியா:-**

கலிலேயக் கடலின் கரையில் அமைந்துள்ள ஒரு பெரிய நகர் திபேரியா ஆகும். ஆந்திப்பாஸ் ஏரோது மன்னனால் திபேரியு பேரரசனைப் பெருமைப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட நகர் இது. கி.பி. 70ம் ஆண்டில் எருசலேம் நகரின் அழிவுக்குப் பின் யூதச் சட்டங்களைப் பற்றி ஆராய்ந்து பல நூற்களை எழுதினர். புகழ் பெற்ற யூத மத வல்லுநர்கள் பலரின் கல்லறைகள் இன்றும் இந்நகரில் உள்ளன.

20 நூற்றாண்டுகளில் வளர்ச்சி, தேய்வு, நிலநடுக்கம், வெள்ளப் பெருக்கு ஆகியவற்றைக் கண்ட இந்நகர் 1937ம் ஆண்டு நவீன நகராக ஆக்கப்பட்டது. இன்று இஸ்ரயேல் நாட்டின் பெரும் நகர்களில் ஒன்றாக, கலிலேயக் கடற்கரையில் உள்ள பல ஊர்களுக்கு மையமாக உள்ளது. பெருமளவு யூதர்களே இந்நகரில் வாழ்கின்றனர். கலிலேயக் கடற்கரையை யொட்டிப் பயணியர் விடுதிகள், உணவகங்கள், பூங்கா, உல்லாசப் படகுகள் இவை அனைத்தும் பயணிகளின் கவனத்தைக் கவர்கின்றன. இந்நகரில் இயேசுவின் வாழ்வை நினைவுபடுத்தும் இடங்கள் எதுவும் இல்லை. கடற்கரை ஓரத்தில் தூய பேதுரு ஆலயம் உள்ளது. இச்சிறு ஆலயம் இயேசு பேதுருவை நோக்கி "என்பின்னே வாருங்கள் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" (மத்.4:19) என்று கூறியதை நினைவுபடுத்தும் இடமாக உள்ளது. இயேசு பேதுருவை அழைக்கும் காட்சியை பெரும் ஓவியமாக எழுதியுள்ளனர்.

உலகனைத்திலும் இருந்து வரும் கன்னியர்களுக்கு விவிலியத்தைப் போதிக்கும் நிலையமும் இந்நகரில் உள்ளது. இங்கு பயணியர் விடுதி ஒன்று கடற்கரையில் உள்ளது. இவ்விடுதியின் மாடியில் நின்று கொண்டு கலிலேயக் கடலின் அழகைக் கண்டு சுவைக்கலாம். கிரேக்கத் திருச்சபை ஆலயம் ஒன்றும் இங்கு உள்ளது.

நன்றி: விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 09
## தூய யோவான் நற்செய்தி
## அதிகாரம் 05 - 08

**அன்பார்ந்த வாசகர்களே,**
“விடுபட்ட எழுத்துப்புதிர்” போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்துக் கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி 09. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 05. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | | | | | | | | | ■ |
| ■ | ■ | | | | | | | | உ |
| கூ | ■ | ஐ | | | | வ | | | ■ |
| | ■ | | | | | | | | வி |
| | ஆ | | | | | ■ | ப | இ | |
| | ■ | | | | | ஏ | | | |
| | ப | | | | | | | | தா |
| ■ | | | | | | | | கா | ■ |
| வி | | | | | | | | | |
| ■ | இ | | | | | | | | |

1. இ.......ம......னின் குரலை 2. ஐ.......பது வ......து
3. ப.......கு 4. உயி......த்தெ......வர் 5. தா.......ம்
6. ப.......னிர........டு கூ......க......ல் 7.வி.....ணகத்......லி.....ந்து
8. இ.......க்கிறவ....... நா...... 9. ஆ.......ரகா.....
10. விரு.......த சேத.......ம் 11. இயே..... 12. ஏ.....ச......ம்
13. கா.......க்........ப் பெ.......டி

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 07
## தூய மத்தேயு நற்செய்தி 26 - 28
## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ட | வு | ளை | ப் | ■ | போ | ற் | றி | யூ |
| ■ | சே | வ | ல் | கூ | வி | ற் | று | ■ | தா |
| ன் | ■ | க | அ | ல் | ன் | ப | ■ | க | சு |
| வி | இ | ன் | றை | க | க | டை | ல் | ல் | ம |
| ரு | ர | ன | ந் | ப | ம | வீ | மை | ல | ன |
| கு | த் | த் | து | ண் | றை | ர | மை | றை | ம |
| க் | த | தி | ■ | ந | இ | ர் | றா | யி | வ |
| மை | தி | ல் | சீ | மோ | ன் | ■ | பொ | ல் | ரு |
| லை | ல் | ■ | ள் | க | ங் | ணு | ண் | உ | ந் |
| த | ம் | ■ | கெ | த் | ச | ம | ணி | ■ | தி |

1. கடவுளைப் போற்றி 2. தலைமைக் குருவின்
3. இரத்த நிலம். 4. சேவல்கூவிற்று 5. கன்னத்தில் அறைந்து 6. சீமோன் 7. கெத்சமனி 8.நண்பகல்.
9. இறை மகன் 10. படை வீரர் 11. பொறாமையால்
12. உண்ணுங்கள் 13. கல்லறையில் 14. யூதாசு மனம் வருந்தி

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

விடைகள் அனுப்பியோர் - 46
சரியானவிடை எழுதியவர்கள் - 21

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
அமலதாசன். ஜெர்லின்
இல: 343 அன்புவழிபுரம்.
பாலையூற்று

**2ம் பரிசு 300/=**
செல்வி. வஜீரா R.F
இல: 21/3,வித்தியாலயம் வீதி
திருகோணமலை.

**3ம் பரிசு 200/=**
செல்வன்.ச.டே. வோறன் பிள்ளை
இல: 68, ஆசீரியர் சதுக்கம்
சகாய இல்லம், உவர்மலை.

**பாராட்டுக்குரியவர்கள்**

1. டொ. ரொ.பியுலா பேராலயம்
2. டே. நிதிஸ்வரி உவர்மலை
3. எஸ். செல்டன் இலிங்கநகர்
4. அ. லக்சன் குவாடலூப்
5. ஜே. செரேனா செல்வநாயகபுரம்
6. பியூலா டானியலா பேராலயம்
7. டி. ஹில்மன் இலிங்கநகர்
8. பா. விமலதாஸ் பேராலயம்
9. ஆர். எமில்ராஜ் செல்வநாயகபுரம்
10. அ. கரோலின் கீர்த்திகா பேராலயம்
11. வேஜின் டி குருஸ் அன்புவழிபுரம்
12. அ. ஜெ. தர்க்ஷனா கும்புறுபிட்டி
13. என். மெற்றிலா பாலையூற்று
14. ஆன் பிறிசில்டா இலிங்கநகர்
15. ஜே. டி. யூட்ஸ் பிறைனி இலிங்கநகர்
16. ஏ. ஜீன் டிலோனா அலஸ்தோட்டம்
17. ரொ. ரொவீனா பேராலயம்
18. ஜே. டேமியன் இலிங்கநகர்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 16
## இணைச்சட்டம் 13 ~ 25
## அதிகாரங்கள்

01. எந்த ஆண்டின் முடிவில் நீ விடுதலை அளிப்பாய்?

**விடை**.................................................

02. யாருக்கு என்றும் அஞ்சி நடக்கக் கற்றுக் கொள்வாய்?

**விடை**.................................................

03. எல்லா முயற்சிகளிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு என்ன வழங்குவார்?

**விடை**.................................................

04. குற்றம் - பாவம் உறுதி செய்யப்பட எத்தனை சாட்சிகளின் வாக்கு மூலம் தேவை?

**விடை**.................................................

05. எவற்றை கலந்து நெய்யப்பட்ட ஆடையை உடுத்தாதே?

**விடை**.................................................

06. வறியவரின் கூலியை எப்போது கொடுக்க வேண்டும்?

**விடை**.................................................

07. போர் அடிக்கும் .................................. வாயைக் கட்டாதே?

**விடை**.................................................

08. உன்னிடமிருந்து தீமையை அகற்று, அதனைக் கேட்டு .............................. எல்லோரும் அஞ்சுவர்?

**விடை**.................................................

09. யாரிடம் வட்டி வாங்கக் கூடாது?

**விடை**.................................................

10. யாருடைய நினைவு வானத்தின் கீழ் இல்லாதவாறு அழிக்க வேண்டும்?

**விடை**.................................................

**பெயர்** ...............................................
**முகவரி** ...............................................
**பங்கு** ...............................................

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 05. 2015

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 14
## எண்ணிக்கை நூல் (25~36 அதிகாரங்கள்)
## விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | நோபாகு | (32:42) |
| 02. | சிம்ரி, சாலூவின் மகன் | (25:14) |
| 03. | ஐந்து பேர் | (36:11) |
| 04. | 40ம் ஆண்டு/5ம் மாதம்/ 1ம் நாள் | (33:38) |
| 05. | 3,37,500 ஆடுகள் | (31:43) |
| 06. | வெள்ளாட்டுக்கிடாய் | (28:15) |
| 07. | நாதாபு, அபிசூ | (26:61) |
| 08. | குரு எலயாசர் மகன் பினகாசுடன் | (31:06) |
| 09. | அபாரிம் மலைமேல் | (27:12) |
| 10. | செலோமியின் மகன் அகிகூத்து | (34:27) |

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்**

**பங்குபற்றியோர்கள் : 44 பேர்**
**சரியான விடையளித்தோர் : 18 பேர்**

## பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி. ரொ. ரொவீனா
இல: 52, பாத்திமா வீதி,
திருகோணமலை.

**2ம் பரிசு 300/=**
செல்வன். ஏ. சுலக்சன்
இல:11/11,சென்யூட்ஸ் லேன்,
பாலையூற்று, திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
செல்வன். ஜே. ஜோசப்
இல: 1314, பாலையூற்று,
திருகோணமலை

## பாராட்டுக்குரியவர்கள்



01. வேர்ஜியா. எல்டன் ~ அன்புவழிபுரம்
02. ரமேஸ். கிரேஸ்மா ~ இலிங்கநகர்
03. அருண் அன்ரன் ராஜ் ~ மூதூர்
04. ஜெ. அபிஆஷா ~ பள்ளத்தோட்டம்.
05. றெமன்சியா அன்ராடோ ~ அலஸ்தோட்டம்
06. அ. நரேஷ் ~ மூதூர்
7. அ. ஸ்ரெவ்யா ~ பாலையூற்று.
8. ஜெ. நிருஷா ~ பள்ளத்தோட்டம்.
9. அமலதாசன் டேர்வின் ~ அன்புவழிபுரம்.
10. சு. மரியஜெனட் ~ பாலையூற்று.
11. ஆர். மேரி ரொஷானி ~ இலிங்கநகர்
12. அ. கரோலின் கீர்த்திகா ~ பேராலயம்
13. ஆர். எமில்ராஜ் ~ செல்வநாயகபுரம்
14. ம . சைமன் ~ மூதூர்
15. க. சுகந்தினி ~ மூதூர்

**குறிப்பு:** இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## மறைக்கல்வி கற்போம் ~ 07

01. மூவொரு கடவுளின் பெருவிழா எப்போது கொண்டாடப்படுகின்றது?
**பெந்தகோஸ்தே திருவிழாவிற்கு அடுத்துவரும் ஞாயிறு.**

02. ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா எப்போது கொண்டாடப்படுகின்றது?
**இயேசுவின் உயிர்ப்பின் பின் வரும் 40வது நாளில்.**

03. பெந்தகோஸ்தே பெருவிழாவை வேறு எப் பெயரால் அழைக்கலாம்?
**திருச்சபையின் பிறந்த நாள்.**

04. அமல மரித்தியாகிகளின் ஸ்தாபகர் யார்? அவரின் விழா எப்போது?
**தூய யூஜின் டி மெசனட்**
**வைகாசி 21.**

05. உலக தொழிலாளர் தினமன்று எந்தத் தூயவரை நினைவு கூறுகின்றோம்?
**தூய சூசையப்பர்.**

06. அன்னை மரியாள் பெர்னடேற்றிக்கு எத்தனை வயதில் எங்கு? எத்தனை தடவைகள் காட்சி கொடுத்தார்?
**14 வயதில், பிரான்சில், 18 தடவைகள்.**

07. கடவுளின் கருவியானவர் யார்?
**இறைவாக்கினர்.**

08. இறைவன் மனிதனுக்கு எழுதிய மடல் எது?
**திருவிவிலியம்.**

09. திருவிவிலியத்தின் படி உண்மையான சீடத் தன்மைக்கும் உறவிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் யார்?
**அன்னை மரியாள்.**

10. பரவசப் பேச்சு பேசுபவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என தூய பவுல் கூறுகின்றார்?
**1 கொரி 14:5 “பரவசப் பேச்சு பேசுகிறவர் திருச்சபையை கட்டியெழுப்பும் நோக்குடன் தாம் பேசுவதை விளக்க வேண்டும்”.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி..

எமது மறைமாவட்டத்துக்காக அன்னையின் பரிந்துரையைச் சிறப்பாக நாடி நிற்போம். இத்திருத்தலத்தின் பங்குத் தந்தைக்கும், பங்கு மக்கள் அனைவருக்கும் இவ்வருட ஜுபிலி ஆண்டைச் சிறப்பிக்க அவர்கள் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளும் இறையாசீரோடும் அம்மா மரியின் பரிந்துரையோடும் சிறப்புற வேண்டுதல் செய்வோம். வாய்ப்புக்கள் கிடைக்கும் போது எமது ஒத்துழைப்பையும், நல்லாதரவையும் தாராளமாகக் கொடுப்போம்.

இறுதியாக இம் மாதம் 31ம் நாள் தூய திரித்துவத்தின் பெருவிழாவையுவும் கொண்டாடுகின்றோம். நாம் இருப்பதும் இயங்குவதும், அனைத்தையும் தொடங்குவதும் முடிப்பதும் எமது கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உறைவிடமுமாகத் திகழும் இந்தத் தூய திரித்துவத்தில்தான் என்பதை எமது உள்ளங்களில் ஆழமாகப் பதிவு செய்ய இது இன்னுமொரு வாய்ப்பு.

அகவாழ்வின் உயிர்மூச்சான அன்பை எமது வாழ்வின் ஆதாரமாகக் கொள்வோம். இனிதே வாழ்வோம். இன்புற்று வாழ்வோம்.

இத்தனை ஆசீர்வாதங்களைத் தன்னகத்தே தாங்கி வரும் இந்த வைகாசி மாதம் எம்மைப் பலப்படுத்த, எம்மத்தியில் மறுமலர்சியைக் கொண்டுவர வாஞ்சையோடு செபிப்போம். அர்ப்பணிப்போடு செயல்படுவோம்.

உயிர்த்த கிறிஸ்துவின் உடனிருப்பும், அவர்தம் ஆவியானவரின் அபிஷேகமும் என்றும் உங்களோடு இருக்க நல்லாசிகள்.

**அருட்பணி ரி. கிங்ஸ்லி றொபட்,**
**மறைமாவட்டக் குருமுதல்வர்,**
**திருகோணமலை மறைமாவட்டம்.**

# மறைமாவட்ட அன்பியப் பேரணி



## திருகோணமலை மறைமாவட்டத்தில் “ஆச்சேஸ் விழா”



## இலிங்கநகர் தூய யோசேப் வாஸ் மூப்பர் அமைப்பினரின் சிரமதானப் பணி



## டிமெல்லோ பழைய மாணவர் ஒன்றியத்தின் சித்திரை புதுவருட நிகழ்வு

டிமெல்லோ பழைய மாணவர்கள் ஒன்றியத்தினரால் 02. 05. 2015 சனிக்கிழமை மூதூர் சகாயபுரத்தில் அமையப் பெற்றுள்ள கல்குவாரியில் தொழில் புரியும் குடும்பத்தினருக்கு விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தியதோடு பரிசில்களும் வழங்கி மகிழ்வித்தனர்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட இந் நிகழ்வுகளை ஒன்றியத்தின் பொறுப்பாளர் அருட்பணி E.A.J. சொய்சா முன்னின்று வழிநடத்தியது குறிப்பிடத்தக்கது. வறிய தொழிளார்களுக்காக நிகழ்ந்த இந்த நிகழ்வில் அருட்பணியாளர்களான N.C. அருள்வரதன், யூஜின் போல் ஜொனத்தன், J. சுதர்சன், A.றொகான் பேணாட் ஆகியோர் பங்கு பற்றி மகிழ்வித்தார்கள்.



## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு கருத்தரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org